இதனைப்பற்றி என்ன? ....

# வேதாகமம்

நமது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்திலே வாழ்த்துக்கள். காலங்கள் அனைத்திலும் திரமான விற்பனை நூலாக வேதாகமம் தொடர்ந்து திகழ்ந்து வருகிறது. காலங்காலமாக வேதாகமம் அதனை வாசிப்பவர்களுக்குத் திருவகத்தூண்டுதலையும், ஆறுதலையும் வழிநடாத்தலையும் வழங்கிவந்திருக்கிறது. ஆனாலும் வேதாகமம் தனிய ஒரு அருட்பாட்டுநூல் மாத்திரமாக? அதுவுந்தான், ஆனாலும் அதைவிடவும் இன்னும் அதிகம்!

வேதாகமத்தைப் பற்றி முக்கியமான சில உண்மைகளை மீளாய்வு செய்வதற்கு சிறிது நேரம் செலவிடுவோமாக.

## வேதாகமம் என்பது என்ன?

வேதாகமத்தைக் குறிக்கும் ஆங்கில வார்த்தையான 'பைபிள்' என்பது கிரேக்க வார்த்தையில் இருந்து வந்தது, அதன் அர்த்தம் "புத்தகம்." இந்த "நல்ல புத்தகம்" என்ன? இந்தக் கேள்விக்கு இரண்டுபகுதிகளாலான பதில் உள்ளது.

முதலாவதாக, வேதாகமம் என்பது, உண்மையிலேயே நூல்களின் ஒரு தொகுப்பாகும் – அதில் 66 நூல்கள் உள்ளன – முதல் நூலான ஆதியாகம் தொடக்கம் கடைசி நூலான வெளிப்படுத்தல் விசேஷம் வரைக்கும். இந்த நூல்கள் ஆயிரமாயிரம் வருடங்களை உள்ளடக்கியதுடன், எபிரேயு மொழி, அராமியமொழி அல்லது கிரேக்கு மொழியிலே எழுதப்பட்டது. வேதாகமத்திலே பல்வேறு விதமான எழுத்துக்கள் உள்ளன: சரித்திர சம்பவம், தீர்க்கதரிசனம், கவிதை, உரைகள், கடிதங்கள் போன்றவைகள். வெறும் மனுஷீகக் கண்ணோட்டத்திலே பார்த்தாலுங்கூட, வேதாகமம் ஒரு அற்புதமான இலக்கியப்படைப்பு என்பதையிட்டு வேறு கேள்வி கிடையாது.

இரண்டாவதாக, முதலாவது பதிலை விடவும் மிக முக்கியமானதாக, "வேதாகம் என்பது என்ன?" என்பதற்கான பதில்: வேதாகமம் தேவனுடைய வார்த்தை. வேதாகமமானது வேதாகம நூல்களின் எழுத்தாசிரியர்களுக்குத் தேவன் வழங்கிய சிந்தைகள் – வார்த்தைகளுந்தான் – போன்றவற்றின் தொகுப்பு. வேதாகமம் தனது சபைக்குத் தேவன் அருளிய கொடையாகும். அது பண்டைய கட்டுக்கதைகள், புராணக்கதைகளின் தொகுப்பு அல்ல. இன்று தேவனுடைய வார்த்தையைத் தொடர்பாடல் செய்வதற்கு பரிசுத்த ஆவியானவர் பயன்படுத்தும் நிச்சயமானதும் உறுதியானதுமான வழிமுறையே வேதாகமம்.

## வேதாகமத்தை நாம் எப்படியாகப் பெற்றோம்?

வேதாகமமே நாம் எப்படியாக அதனைப் பெற்றோம் என்பதைக் கூறுகிறது. "வேத வாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது... உபதேசத்துக்கும் கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பித்தலுக்கும் பிரயோஜனம் உள்ளது (2 தீமோ. 3:16–17). வேறோர் இடத்திலே நாம் வாசிக்கிறோம், "தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்" (2 பேதுரு 1:21).

வேதாகமமானது தேவனுடைய உண்மையான வார்த்தை என்பதை மக்கள் அறிந்திருந்தபடியால், அது மிகக்கவனமாக, அதன் விபரங்கள் வரைக்குப் எழுத்தெழுத்தாக, வார்த்தை வார்த்தையாக பிரதிபண்ணப்பட்டு, மீள்பிரதிபண்ணப்பட்டது. இன்று நாம் வேதாகமத்தின் உண்மையான மூல எழுத்துப்பகுதியைக் கொண்டிராவிட்டாலுங்கூட, பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையை எமக்காகப் பாதுகாத்துவந்துள்ளார் என்பதையிட்டு நாம் நிச்சயித்துக்கொள்ளலாம். புதிய ஏற்பாட்டன் பல்லாயிரக் கையெழுத்துப்பிரதிகளையிட்ட ஆய்வானது பல்வேறு எழுத்துப்பிரதிகளிடையே சிறுசிறு வேறுபாடுகள் இருந்தாலுங்கூட, வேதாகமத்தின் பிரதான போதனை முரண்படும்படியாக எதுவுமே இல்லை என்பதைத் தெரிவித்துள்ளது.

எமது ஆங்கில வேதாகமங்கள் மூல மொழிகளிலுள்ள வேதாகமத்தின் மொழிபெயர்ப்பாகும். நாம் நம்பத்தகுந்த மொழி பெயர்ப்புக்களைப் பயன்படுத்தும்போது, தேவனுடைய மெய்யான வார்த்தையை நாம் கொண்டிருக்கிறோம் என்பதை நிச்சயித்துக் கொள்ளலாம். தேவனுடைய வார்த்தையானது எபிரேயு, அரேமிய அல்லது கிரேக்கு எந்த மொழியில் இருந்தாலுமென்ன, மூல மொழிகளில் இருந்து உண்மைத்தனத்துடன் மொழிபெயர்க்கப் பட்டிருந்தால் ஆங்கிலத்திலோ அல்லது வேறு மொழிகளிலுமோ அது தேவனுடைய வார்த்தையேதான். ஆங்கிலத்திலே நம்பக்கூடிய மொழிபெயர்ப்புகளாக கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பு, புதிய கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பு, பழைய திருத்திய நியம மொழிபெயர்ப்பு, புதிய சர்வதேச மொழிபெயர்ப்பு, மற்றும் புதிய அமெரிக்க நியம மொழிபெயர்ப்பு ஆகியவைகள் உள்ளன.

## வேதாகமம் ஏன் அத்தனை முக்கியமானது?

"வேதாகமம் என்ன செய்யவேண்டும் என எனக்குக் கூறுவதால் அது எனக்கு முக்கியமானது" என்று சிலர் சொல்லக்கூடும். வேறொருவர், "பழை கதைகள் எனது பிள்ளைப்பராயத்தை நினைவூட்டுகிறது" என்றோ அல்லது "நாளாந்த வாழ்க்கைக்கான வழிகாட்டல் நூல் வேதாகமம்" என்றோ கூறக்கூடும். இந்தப்பதில்களிலே உண்மையின் தானியம் உள்ளதுதான், ஆனாலுங்கூட, ஏன் வேதாகமம் முக்கியம் என்பதன் பிரதான காரணத்தை அவை தவறவிட்டுள்ளன: அது இயேசு யார் என்பதையும் அவர் எமக்காகச் செய்தது என்ன என்பதையும் அறிவதற்கான உறுதியும் நிச்சயமுமான மூல்மமாகும்.

இயேசு சொன்னார், "வேதவாக்கியங்கள் என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கின்றன" (யோவான் 5:39). வேதாகமத்தின் பிரதான செய்தி இயசுவின் வாழ்வு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் ஊடாக, உலகத்தைத் தன்னுடன் ஒப்புரவாக்கும் தேவனுடைய பணி பற்றிய நற்செய்தியாகும். பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் எங்கிலும் வேதவாக்கியங்களின் முக்கிய செய்தி தனது மைந்தனை பெற்றுக் கொள்வதற்காகத் தேவன் உலகினைத் தயார்படுத்தியமை பற்றியும், பின்னர் அவர் இங்கு இருக்கும்போது செய்தவைகள் என்ன என்பதைப் பற்றியதுமான வர்த்தமானங்களாகும். மேலும் சபையானது இரட்சிப்பின் இந்த மகிமைமிகு செய்தியை எப்படியாகப் பெற்றுக்கொண்டது என்பதையும், அறியப்பட்ட உலகிலே அது எப்படியாக வளர்ந்து பரந்தது என்பதையும் கூறுகிறது. லூத்தர் ஒரு தடவை வேதாகமத்தை இயேசு சற்றிக்கிடத்தப்பட்ட குழந்தைத் துணிகளுக்கு ஒப்பிட்டார். எனவே வேதாகமம் கிறிஸ்து மையமானதாகும்.

எமது கர்த்தர் கூறினார், "எனது வார்த்தையிலே நிலைத்திருந்தால் நீங்கள் மெய்யாகவே என் சீஷராக இருப்பீர்கள்" (யோவான் 8:31). வேதாகமத்தின் தெய்வீக அதிகாரமும் நம்பகத் தகுதன்மையும் வேதாகமத்தை எழுதுவதற்குத் தேவன் பாவித்த எழுத்தாளர்களிலே தங்கியதல்ல, சபை அதற்கு வழங்கிய ஒப்புதலில் அது சார்ந்ததும் அல்ல, மாறாக முற்றும் முழுவதுமாக அது கர்த்தரின் வார்த்தை எனும் சத்தியத்திலேயே சார்ந்துள்ளது. இதனை நாம் எப்படியாக அறிகிறோம்? வேதாகமத்தின் முழுமையான அதிகாரமானது தேவன் நமக்குக் கொடையாக வழங்கும் விசுவாசத்தின் பகுதியாக நிச்சயமாகவே உள்ளது.

மெய்யான மானிடப்பிறவிகள் தேவனிடமிருந்து மெய்யான வார்த்தைகள் எழுதும்படியாக வழங்கப்பெற்றனர். எமது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து மெய்யான தேவனும் மெய்யான மனிதனுமாக

உள்ளதால், வேதாகமமும் மெய்யாகவே தேவனுடைய வார்த்தையாகவும் மெய்யாகவே மானிடர்களின் எழுத்தாக்கங்களாயும் உள்ளது. எமது கர்த்தராகிய இயேசு பாவத்தில் இருந்தும் தவறில் இருந்தும் விடுபட்டதான மானிட சரீரத்தை எடுத்து போலவே, தேவனும் தன்னைப்பற்றிய தவறற்றதான எழுதப்பெற்ற வெளிப் படுத்தலை வழங்கும்படியாக மனிதப்பிறவிகளைப் பயன்படுத்தினார். எனவே, வேதாகமம் தவறுவிடக்கூடிய ஆற்றல் அற்றது (தவறற்றது infallible) எனவும், தவறு இல்லாதது (வழுவற்றது inerrant) எனவும் நாம் நம்புகிறோம்.

வேதாமத்தைச் சரிவரப் புரிந்துகொள்ளும்படியாக, வேதாகமத்திலே முக்கியமான ஒரு வேறுபாடு உள்ளதை மனதிற் கொள்ளவேண்டும்: அதுதான் நியாயப்பிரமாணத்துக்கும் சுவிசேஷத்துக்கும் இடையிலான வேறுபாடு. வேதாகமம் தேவனுடைய பரிபூரண பரிசுத்தம் மற்றும் நியே வெளிப்படுத்து வதுடன், பூரணத்துவத்தையிட்ட அவரது எதிர்பார்ப்பினையும் வெளிப்படுத்துகிறது. அவரது நியாயப்பிரமாணம், அவரது திறம்பட்ட பத்துக் கற்பனைகளிலே சுருக்கப்பட்டதாக, எமது பாவம்நிறைந்த குழப்பத்தையும் எம்மை நாமே இரட்சிக்கமுடியாது என்பதையும் வெளிப்படுத்துகிறது. சுவிசேஷமோ எமது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து தனது வாழ்வு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதலினூடாக எமக்கு பாவங்களில் இருந்து முழுமையான மன்னிப்பை வழங்கியுள்ளார் எனும் சந்தோஷமிகு செய்தியாகும். வேதாகமத்தைச் சரிவரப் புரிவதற்கான திறவுகோலாக நியாயப்பிரமாணத்துக்கும் சுவிசேஷத்துக்கும் இடையிலான சரியான வேறுபாடு அமைந்துள்ளது.

வேதாகமத்தின் மிகமுக்கியமான செய்தியானது தேவனுடைய நியாயப்பிரமாணம் அல்ல. வேதாகமம் வெறுமனே நாளாந்த வாழ்வுக்கான கொள்கைளின் ஒரு தொகுப்பு அல்ல. நாம் கொண்டிருக்கும் ஒவ்வொரு சாத்தியமான கேள்விகளுக்கும் பதில் தரும் ஒரு பாடநூலும் அல்ல வேதாகமம். எதிர்காலத்தை அதன் கடைசிவிபரம் மட்டுக்கும் விபரிக்கும் நூலாகவும் வேதாகமம் இல்லை. வேதாகமத்தின் மையமானதும் மிகமுக்கியமானதுமான போதனை சுவிசேஷமாகும், அதாவது இயேசுக்கிறிஸ்துவூடாக தேவனுடைய கொடையாக வழங்கப்படும் இரட்சிப்பைப் பற்றிய நற்செய்தி. பழைய ஏற்பாடு தொடக்கம் புதிய ஏற்பாடு வரைக்குமாக வேதாகமம் முழுவதிலும் ஆதிக்கம் செலுத்துவது சுவிசேஷ செய்தியாகும். எனவே வேதாகமமானது சுவிசேஷம்–மையமானதாகும்.

வேதாகமமானது அதன் நலனுக்கான மாத்திரம் வழங்கப்படவில்லை என்பதை நாம் அறிவோம். வேதாகமத்தைச் சொந்தமாகக் கொண்டிருப்பதால் நாம் இரட்சிக்கப்படுவதில்லை. நாம் வேதாகமத்திலே வெளிப்படுத்தப்படும் எமது கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவினால் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். நாம் வேதாகமத்திலே நம்பிக்கை கொள்வதற்குக் காரணம் அது கர்த்தரின் வார்த்தை என்பதாலேயே. நாம் அவரிலே நம்பிக்கை கொள்கிறோம், எனவே அவரது வார்த்தை உண்மை என நாம் நம்புகிறோம். அவர் தந்துள்ளதையே நாம் பெற்றுக்கொள்கிறோம். அவர் எமக்கு வேத ஆகமங்களைத் தந்துள்ளார். எனவே வேதாகமமே சபை நம்பும், கற்பிக்கும், அறிக்கையிடும் மற்றும் கைக்கொள்ளும் அனைத்துக்குமான அத்திவாரமும் உரைகல்லுமாகும். ஏன்? வேதாகமம் திருவகத்தூண்டப்பெற்றதும், கிறிஸ்து மையமானதும் சுவிசேஷ மையமானதுமான கர்த்தருடைய வார்த்தையாகும்.

## வேதாகமத்தை நாம் எப்படிப் பயன்படுத்துகிறோம்?

சபையின் ஊழியத்துக்கான அத்திவாரம் வேதாகமம் ஆகும். வேதாகமம் எப்போதுமே தனித்திருக்கும்படியாகவோ அல்லது கிறிஸ்தவ சபை என நாம் அழைக்கும் விசுவாச சமூகத்தில் இருந்து புறம்பாக இருப்பதற்கோ ஏற்படுத்தப்படவில்லை. வெறுமனே வேதாகமத்தை வாசித்தால் சபைக்குவருவதைத் தவிர்க்கலாம் எனச்சிலர் நினைப்பது துக்ககரமானதாகும். எமது கர்த்தரின் கொடைகளை நாம் களிப்புடன் பெற்று, "இது வேண்டும், அது வேண்டாம்" என்று நாம் சொல்வதில்லை. வேதாகமம் பற்றிய எமது உயர்வான கனமும் எண்ணமும் வேதாகமத்துக்கும் சபைக்கும் இடையே ஒரு ஆப்பை இறுக்குவதற்குப் பயன்படுவது தவறான எண்ணப்போக்காகும். சபையானது கர்த்தரின் வார்த்தையையும் திருவருட்சாதனங்களையும் சூழ்ந்ததான தேவனுடைய மக்களின் கூடுகையாகும். வேத ஆகமங்கள் தேவனுடைய வார்த்தையின் உறுதியும் நிச்சயமுமான வெளிப்படுத்தலாகும் என்பதால் அது கிறிஸ்தவர்களால் சபையிலும் வீட்டிலும் வாசிக்கப்படவும், கற்கப்படவும், தியானிக்கப்படவும் வேண்டியதாகும்.

லூத்தரன்களாகிய நாம் வேத ஆகமமானது வேதாகமத்தின் மத்திம சத்தியத்துக்கு, அதாவது சுவிசேஷத்துக்கு, உரியபடியாகவே வியாக்கியானம் செய்யப்படவேண்டுமே ஒழிய, அது பிரித்தெடுத்துப் போதிக்கப்படவோ அல்லது சுவிசேஷத்துக்கு உண்மையிலே முரண்படும் காரியங்களைக் கற்பிப்பதற்கோ அல்ல. எனவே நாம் நாம் வேதாகமத்தின் வார்த்தைகளின் இலக்கணத்துக்கு நெருங்கிய கவனம் செலுத்துகிறோம், எழுத்தாக்கத்தின் தெளிவான விதத்திலே அதன் உளங்கொண்ட அர்த்தத்தைக் காணும்படிக்காக. பரிசுத்த ஆவியாகிய தேவன் வேத ஆகமங்களூடாக செயற்பட்டு, சபையானது வார்த்தையின் பிரசங்கத்துக்காகவும் திருவருட் சாதனங்களைக் கைக்கொள்ளும்படியாகவும் கூடிவரும்போது, அதனை உருவாக்கித் தாங்கிவருகிறார்.

தேவனுடைய வார்த்தையானது பிரசங்கிக்கப்பட்டு, கற்பிக்கப்பட்டு, படிக்கப்பட்டு, வாசிக்கப்பட்டு, கற்கப்பட்டு அல்லது தியானிக்கப்படும் போதெல்லாம், பரிசுத்த ஆவியானவர் மக்களை பாவத்திலிருந்து திருப்பி அவர்களைக் கிறிஸ்துவண்டை அவர்களது இரட்சிப்புக்காக அண்டிவரும்படிக்கு செயற்திறனுடன் செயற்படுகிறார். எனவே நாம் அனுதினமும் வார்த்தையில் இருக்க விரும்புகிறோம். வீட்டிலே நாம் எமது தனிப்பட்ட மற்றும் குடும்பத் தியானவேளைகளிலே வார்த்தையை வாசித்து அதனைத் தியானிக்கிறோம். சபையிலே, எமது கீர்த்தனைகளும் ஆராதனை ஒழுங்கும் தேவனுடைய வார்த்தையிலே நங்கூரமிடப்பெற்றவை. எமது போதகர்கள் எமக்கு சபை வருடத்திலே பிரதி ஞாயிறுதோறும் ஒதுக்கப்பட்ட வேத ஆகமப் பாடங்களின் அடிப்படையிலே எமக்குப் பிரசங்கிக்கின்றனர். எமது பாடசாலை ஆசிரியர்கள் தேவனுடைய வார்த்தையின் ஆளமான அறிவுக்குள் எமது பிள்ளைகளை நடாத்துகின்றனர் எமது ஞாயிறு பாடசாலைகளிலே பிள்ளைகள் பிள்ளைகள் வேதாகம வர்த்தமானங்களைக் கற்றுக்கொண்டு, அதனால் அவர்களது வாழ்வுக்கான அத்திவாரத்தைக் கொண்டிருக்கின்றனர். வாலிப மற்றும் முதுவாலிப வேதப்படிப்புகளிலே, வேதாகமங்கள், நாம் தேவனுடைய ஜனங்களாக எப்படி எமது வாழ்வை வாழ்வது என்பதை நாம் புரிந்துகொள்ளவும் எம்மை ஒளிர்விக்கவும், தகவல் வழங்கவும் பல்வேறு வழிமுறைகளிலே கற்கப்படுகிறது.

எமக்கும் அனைத்து மக்களுக்கும் வேத ஆகமங்கள் என்னே ஒரு ஆசிர்வாதமான கொடையாக உள்ளது! தன்னைப்பற்றி நாம் அறியும்படியாகத் தேவன் விரும்பும் அனைத்துமே அவரது வார்த்தையிலே உள்ளடங்கியுள்ளது. வேத ஆகமங்களூடாக பரிசுத்த ஆவியானவர் எமது பாவநிலைமை பற்றிய உண்மையை எமக்கு வெளிப்படுத்துவதுடன், தேவனுடைய மகனாகிய இயேசுக் கிறிஸ்துவூடாக தேவனைடய இரட்சிப்புப்பணி பற்றிய களிப்புமிகு செய்தியையும் வெளிப்படுத்துகிறார். மெய்யாகவே, தேவனைடய வார்த்தையானது எமது கால்களுக்குத் தீபமும் எமது பாதைக்கும் வெளிச்சமுந்தான் (சங்.119:105). அதனாற்தான் நாம் ஜெபிக்கிறோம், "கர்த்தாவே, உமது வார்த்தையிலே எம்மை நிலைவரப்படுத்தும்."

கலாநிதி A.L. பர்றி (Barry)
தலைவர்,
லூத்தரன் சபை – மிசூரி திருப்பேரவை